# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் உபகோயிலான கீழன்பில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் ஆலய பூஜைப் பொருட்கள் விற்பனை செய்து கொள்ளும் உரிமம் நிபந்தனைகள்

## (கடைகள் 1 முதல் 9 வரை)

பசலி 1431

(10.09.2021 முதல் 30.06.2022 முடிய) 298 நாட்களுக்கு

1. உரிமங்களுக்கான டெபாசிட் தொகையினை வங்கி வரைவோலை (Demand Draft) மூலமாக டெண்டர் கொடுக்க விரும்புபவர் அல்லது ஏலம் கேட்க விரும்புவோர் இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் திருச்சிராப்பள்ளி 620 006 என்ற பெயருக்கு பெறப்படும்படியாக முகப்புக் கடிதத்துடன் செலுத்த வேண்டும்.
2. மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற டெண்டர்கள் யாவும் பொது ஏலம் முடிந்தவுடன் திறக்கப்படும். பொது ஏல கேள்வியைக்காட்டிலும் யார் டெண்டரில் அதிகத்தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்களோ அன்னாரது டெண்டர் ஆணையரது அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்படும். டெண்டரில் குறிப்பிட்டுள்ள தொகை ஏலத் தொகையை காட்டிலும் குறைவாக இருந்தால் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரருக்கு உரிமத்தினை விட பரிந்துரை செய்யப்படும். ஏலத் தொகை அல்லது டெண்டரில் குறிப்பிட்டிருக்கும் தொகை திருக்கோயில் மதிப்பைக் காட்டிலும் குறைவாக இருப்பின் டெண்டரில் குறிப்பிட்டிருக்கும் தொகை ஏற்றுக் கொள்வதற்கில்லை.
3. டெண்டர் கொடுத்தவர்கள் டெண்டருடன் கொடுத்த டெபாசிட் தொகையினையே ஏலகால டெபாசிட்டாக வைத்துக் கொண்டு பொது ஏலத்திலும் கலந்து கொள்ளலாம்.
4. டெண்டர் கொடுக்காதவர்களும் 1வது நிபந்தனையில் தெரிவித்தபடி உரிய டெபாசிட் தொகையை முகப்பு கடிதத்துடன் கொடுத்து ஏலத்தில் கலந்து கொள்ளலாம் டெண்டருடன் எந்தவிதமான நிபந்தனைகளோ விதிகளோ அனுப்பப்பட்டால் அவை திருக்கோயில் நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. டெபாசிட் செலுத்தாத டெண்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏலத்திற்கு டெபாசிட் செலுத்தாதவர்கள் ஏலம் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.
6. ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக டெபாசிட் தொகை வரைவோலையாக செலுத்தப்பட வேண்டும். ஒருவர் ஒரு இனத்திற்கு பொதுஏலம் மற்றும் டெண்டர் ஆகிய இரண்டு வகையிலும் கலந்துகொள்ள விரும்பினால் டெண்டர் பெட்டியில் டெண்டர் படிவத்தை வரைவோலையுடன் இணைத்து சேர்த்துவிட்டு அந்த வரைவோலை நகலை பொது ஏலத்தின்போது வழங்கி பதிவு செய்து கொண்டு பொது ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
7. டெண்டர் மற்றும் ஏலம் உறுதியாகாத நபர்களுக்கு மேற்படியார்களது டெபாசிட் தொகை உடன் வழங்கப்படும்.

8. டெண்டர் மற்றும் ஏலத்தினை காரணம் கூறாமல் ரத்து செய்யவும் வேறு தேதிக்கு மாற்றி வைக்கவும், திருக்கோயில் நலன் கருதி ஏல நிபந்தனைகளை கூட்டவோ அல்லது குறைக்கவோ இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு.

9. ஏலம் மற்றும் டெண்டர் உறுதி செய்யப்பட்டவுடன் ₹.20/−க்கான அரசு முத்திரைத்தாளில் தேவஸ்தான வாசகப்படி முச்சலிக்கா எழுதிக் கொடுக்கப்பட்ட பின்னரே உரிமத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்படும்.

10. எக்காரணம் கொண்டும் ஏலத்தொகையில் தள்ளுபடி கோர டெண்டர்தாரருக்கோ அல்லது ஏலதாரருக்கோ உரிமை இல்லை. ஏல இனத்தில் நஷ்டம் ஏதும் ஏற்பட்டால் அதற்கு நிர்வாகம் பொறுப்பேற்காது. பிரஸ்தாப உரிமம் பற்றி நன்கு அறிந்த பின்னரே டெபாசிட் செலுத்தி டெண்டர் கொடுத்ததாகவும், ஏலத்தில் கேள்வி கேட்டதாகவும் கருதப்படும்.

**11. ஏலம் உறுதி செய்யப்பட்ட நபர் ஏல தினத்தன்றே ஏலத் தொகை முழுவதையும் செலுத்திவிட வேண்டும். எக்காரணம் கொண்டும் கால அவகாசம் வழங்கப்பட மாட்டாது.**

12. ஏலம் உறுதி செய்யப்பட்ட நபர் ஏல நிபந்தனைகளின்படி நடக்காது, மறு ஏலம் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அதனால் திருக்கோயிலுக்கு ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் டெண்டர் மற்றும் ஏல டெபாசிட் தொகையினை பறிமுதல் செய்து ஆலய ஆதாயமாக்குதல் உள்ளிட்டு மேற்படி நபரை பொறுப்பாளியாக்கி தொகை வசூலிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13. திருக்கோயிலுக்கு எந்த வகையிலாவது பாக்கி வைத்திருப்பவர்கள், அவரது உறவினர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் டெண்டரிலோ பொது ஏலத்திலோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.

14. டெண்டர் மற்றும் பொது ஏலம் இந்து சமய அறநிலையத்துறையின் சட்டவிதிகளுக்கு உட்பட்டது.

15. உரிமதாரர் ஏல நிபந்தனைகளுக்கு முரணாக செயல்படுவதாக தெரியவரப்பெறின் உடனடியாக உரிமத்தை ரத்து செய்து இதனால் திருக்கோயிலுக்கு ஏற்படும் நஷ்டத்திற்கு உரிமதாரரை பொறுப்பாளியாக்கப்படும். எக்காரணம் கொண்டும் உரிமதாரர் உரிமத்தினை மற்றவர்களுக்கு உள்உரிமமோ வேறு நபரை பினாமியாகவோ செயல்பட அனுமதிக்கக்கூடாது.

16. ஆதார் அட்டை நகல் , பான்கார்டு நகல், இருப்பிடச் சான்று நகல் சமர்ப்பிக்க வேண்டும்.

17. மேற்படி கடை உரிமத்தினை ஏலம் எடுத்தவர்கள் திருக்கோயிலால் பூச்சொரிதல், தேர் திருவிழா மற்றும் பஞ்சப்பிரகாரம் திருநாட்களில் விடப்படும் தற்காலிக கடைகளுக்கு எந்தவித ஆட்சேபணையும் தெரிவிக்கக்கூடாது.

18. உரிமதாரர் கடைகளில் தீயணைப்பான் கருவி பொருத்தி பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

19. கடைகளில் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தக்கூடாது.

20. நெய்விளக்குகள், எள்ளு விளக்குகள் மற்றும் எண்ணெய் விற்பனை செய்யக்கூடாது.

21. டெபாசிட் தொகை வங்கி வரைவோலையாக **இணை ஆணையர்/செயல் அலுவலர் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்** என்ற பெயரில் மாற்றும் வகையில் இருக்க வேண்டும்.

22. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

**நிர்வாகம்**